www.Padasalai.Net www.CBSEtips.in

# முதல் இடைப் பருவத் தேர்வு – 2022

## தமிழ்

**10** - ஆம் வகுப்பு

பதிவு எண். | | | | | | |

காலம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

### பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதவும்.** 7 X 1 = 7

1. பாவாணர் நூலகத்தை உருவாக்கியவர் ............ .
அ) தாமோதரனார் ஆ) தேவநேயப் பாவாணர் இ) இளங்குமரனார் ஈ) வரதராசனார்

2. உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலகமாநாடு நடத்திய முதல் நாடு .............. .
அ) சிங்கப்பூர் ஆ) மலேசியா இ) அமெரிக்கா ஈ) லண்டன்

3. சிந்துக்குத் தந்தை என்று பாராட்டப் பெற்றவர்
அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) கவிமணி ஈ) வைரமுத்து

4. உறுதுயர் இலக்கணக் குறிப்புத் தருக. அ) பண்புத்தொகை
ஆ) வேற்றுமைத்தொகை இ) அன்மொழித்தொகை ஈ) வினைத்தொகை

***பின்வரும் வரும் பாடலைப் படித்து 5, 6, 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.***

நும்இல் போல நில்லாது புக்கு
கிழவிர் போலக் கேளாது கெழீஇ
சேட்புலம்பு அகல இனிய கூற
பருஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேலையொடு
கருஉக்கண் கிறடிப் பொம்மல் பெறுகுவீர்

5. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?
அ) தமிழ்விடு தூது ஆ) காசிக்காண்டம் இ) மலைபடுகடாம் ஈ) முல்லைப் பாட்டு

6. கெழீஇ ................ இலக்கணக் குறிப்புத் தருக. அ) செய்யுளிசை அளபெடை
ஆ) சொல்லிசை அளபெடை இ) இன்னிசை அளபெடை

7. பொம்மல் – பொருள் கூறுக. அ) சோறு ஆ) சுற்றம் இ) பள்ளம் ஈ) கூத்தர்

### பகுதி – II (பிரிவு- 1)

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண். 12 - க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 2 X 2 = 4

8. பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?

9. விடைக்கு ஏற்ற வினா அமைக்க.
அ) பாட்டுக்கு ஒரு புலவன் என்று பாரதியாரைப் பாராட்டியவர் கவிமணி.
ஆ) இருத்தலும் இருத்தல் நிமித்தமும் உரிப்பொருள் எனப்படும்.

10. வசனகவிதை குறிப்பு வரைக.

11. 'பல்லார்' எனத் தொடங்கும் திருக்குறள் எழுதுக.

### பிரிவு- 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 2 X 2 = 4

12. ***இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.***
அ) மலை – மாலை ஆ) வளி – வாளி

13. ***சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.***
அ) கீரிபாம்பு ஆ) முத்துப்பல்

14. ***கலைச் சொற்கள் தருக.*** அ) Folk Literature ஆ) Storm

15. ***பகுபத உறுப்பிலக்கணம் தருக.*** மலைந்து



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

## பகுதி – III

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக. வினா எண். 18 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

16. ***உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.*** 3 X 3 = 9

அமெரிக்காவின் மினசோட்டி தமிழ்ச்சங்கம் 'வாழையிலை விருந்து விழா'வை ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றது. தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகளைக் கொண்டு வாழையிலையில் விருந்து வைக்கின்றனர் முருங்கைக்காய் சாம்பார், வேப்பம்பூ ரசம், மோர்க்குழம்பு தினைப்பாயாசம், அப்பளம் எனச் சுவையாகத் தமிழர் விருந்து கொடுக்கின்றனர்.

அ) மினசோட்டா தமிழ்ச்சங்கம் எங்குள்ளது?

ஆ) மினசோட்டா தமிழ்ச்சங்கம் எவ்விழாவை ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றது?

இ) தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகள் யாவை? (அல்லது)

சோலைக்காற்றும், மின்சாரக்காற்றும் பேசிக்கொல்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.

17. **அடிபிறழாமல் எழுதுக.**

அன்னைமொழியே எனத் தொடங்கும் பாவலரேறு பெருஞ்சித்தினாரின் பாடல். ***(அல்லது)***

விருந்தினராக ஒருவன் வந்து எதிரின் என்று தொடங்கும் காசிக்காண்டம் பாடல்.

18. வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு – இக்குறளில் பயின்றுவரும் அணியை விளக்குக. ***(அல்லது)***

கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு!
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு!
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு

– ***இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.***

## பகுதி – IV

**பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 x 4 = 12

19. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை எழுதுக.

20. உணவுவிடுதியொன்றில், வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுடன் உணவுபாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

21. இன்சொற்களைப் பேசுவதனால் விளையும் நன்மைகள் ஐந்தினை எழுதுக.

22. காட்சியினைக் கண்டு கவினுற எழுதுக.



**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2 x 7 = 14

23. ***நயம் பாராட்டுக.***

"கத்து கடல் சூழ்நாகைக் காத்தான் தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போது அரிசிவரும் – குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓர் அகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்" – காளமேகப்புலவர்.

24. காற்று மாசினைத் தடுக்க நீங்கள் மேற்கொள்ளும் வழிமுறைகளை எழுதுக.

25. புயலிலே ஒரு தோணிகதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும், அடுக்குத் தொடர்களும், ஒலிக்குறிப்புச் சொற்களும், புயலில் தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன.

26. சான்றோர் வளர்த்த தமிழ் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com